**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4615/ஆ5/2024, நாள்.18/11/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – திருக்குறளை இயற்றிய அய்யன் திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவியது – வெள்ளிவிழா ஆண்டு – 01 ஜனவரி 2025 முன்னிட்டு – பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள் நடத்துதல் – சார்பு

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.19528/எம்1/இ1/2024, நாள்.14.11.2024

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்திற்கிணங்க, திருக்குறள் எழுதிய திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை நிறுவப்பட்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி சிலையை திறந்து வைத்து தமிழ்நாடு மக்களுக்காக அர்பணித்தார்கள். இந்நிகழ்வின் 25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் அதற்கான வெள்ளி விழா 31.12.2024 மற்றும் 01.01.2025 ஆகிய இரண்டு நாட்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கன்னியாகுமரியில் விழா நடைபெற உள்ளது. ஜனவரி மாதம் 1 ஆம் தேதி 2025 அன்று சிறப்பு கொண்டாடத்தின் ஒரு பகுதியாக இரு பிரிவுகளில்,

- ⇨ பிரிவு I – 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை
- ⇨ பிரிவு II – 9 மற்றும் 11ஆம் வகுப்பு

பயிலும் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வராற்றினையும், சிறப்பினையும் அனைவரும் அறியும் வண்ணம் கட்டுரைப் போட்டிகள் பின்வரும் கீழ்காணும் தலைப்புகளில்

- ➢ **அய்யன் வள்ளுவரின் அடி தொடர சூளுரைப்போம்**
- ➢ **எனக்குப் பிடித்த திருக்குறள்.**

கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டுரைப் போட்டிகள் விவரம் | போட்டி நடைபெறும் நாட்கள் |
|---|---|---|
| 1 | பள்ளி அளவில் போட்டிகள் | 19.11.2024 மற்றும் 20.11.2024 |
| 2 | வட்டார அளவிலான போட்டிகள் | 22.11.2024 |
| 3 | மாவட்ட அளவிலான போட்டிகள் | 27.11.2024 மற்றும் 28.11.2024 |
| 4 | மாநில அளவிலான பரிசுக்கான தெரிவு | 04.12.2024 |

பள்ளி அளவிலான போட்டியில் முதலிடம் பெற்றவர்கள் வட்டார அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

வட்டார அளவில் முதலிடம் பெறுபவர்கள் மாவட்ட அளவிலான போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் பிரிவு I – 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை வரையிலான மாணவர்கள் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரையினை எழுதுதல் வேண்டும். பிரிவு II – 9 மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்கள் 300 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரையினை எழுதுதல் வேண்டும்.

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பள்ளி அளவில் கட்டுரை போட்டியினை நடத்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறும், மேலும் வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவிலான கட்டுரை போட்டிகளை ஒருங்கிணைந்து நடத்தி மாவட்ட அளவில் முதல் இடம் மற்றும் இரண்டாம் இடம் பெறும் மாணவர்களின் விவரங்கள் மற்றும் அவர்களின் கட்டுரைகளை இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18.11.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை/ தனியார்/ தொடக்கக்கல்வி)
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்:

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை /
   உயர்நிலை / மேல்நிலை பள்ளிகள், மற்றும் தனியார் பள்ளிகள்.
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)